10th August 1965]

(*b*) the number yet to be provided?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 15.

(*b*) 109.

1964-ல் தஞ்சை மாவட்ட கிராமங்களுக்கு மின்சார வசதி

* *174 கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1964-ம் ஆண்டில் எத்தனை கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்ய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : The extension of electricity to villages is undertaken by the Madras State Electricity Board and Licencees in their respective areas. During the calendar year 1964, 36 villages and hamlets in the Board's area and 51 villages and hamlets in the licencees areas in the Thanjavur District were electrified.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவரவர்களே, ஸ்டேட் எலக்ட்ரிசிடி போர்டு லைன் போடுவது, எஸ்.எம்.இ. கார்ப்பரேஷனுடைய லைனுக்குப் பக்கத்திலே வருகிறது. அந்தக் கார்ப்பரேஷனுடைய லைனிலிருந்து கரண்ட் எடுத்துக்கொண்டால் அது சிரமமாக இருக்காதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைப்பற்றி நான் எலக்ட்ரிசிடி பட்ஜெட் விவாதத்தின்போதே சொன்னேன். சிக்கிரமாக இந்த லைசென்ஸீஸ் ஏரியாக்களை எடுத்துக்கொண்டால், இந்தப் பிரச்னை தீர்ந்துவிடுமென்று நினைக்கிறேன்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : அப்படி எடுத்துக்கொள்கிறவரையிலும் இரண்டு லைன்கள் போடவேண்டியிருக்கிறது. ஆகவே, கம்பெனிகளின் கரண்டிற்காகத் தனி மீட்டர் வைத்து கணக்கெடுத்தால் சுலபமாக இருக்காதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது தவிர்க்கமுடியாதது.

கோடம்பாக்கம்—புதூர் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்திற்கான ஈட்டுத்தொகை.

* 172 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை வீட்டு வசதி யூனிட்டின் கோடம்பாக்கம்-புதூர் (Part I) ஸ்கீமின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்திற்கான ஈட்டுத் தொகை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் என்ன?

(உ) அதனால் அதிகப்படியாகக் கொடுக்கப்பட்ட வட்டித் தொகை எவ்வளவு?